பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
06 08 2024 **TUESDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. **Fiji-**யில் பயணம் மேற்கொண்டு வரும் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமரை இன்று சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்துகிறார்.

2. இந்தியாவிலிருந்து பங்களாதேஷ்-க்கான விமான சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

3. பங்களாதேஷில் தற்காலிக அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டின் ராணுவத் தலைவர் ஜென்ரல் **Waqar Uz Zaman** கூறியுள்ளார்.

4. நாட்டின் வடமேற்கு மற்றும் கிழக்குப் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது..

5. ஒலிம்பிக் ஆடவர் டேபிள் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

**>>>><<<**

**Fiji-**யில் பயணம் மேற்கொண்டு வரும் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு. **Ratu Wiliame** மற்றும் பிரதமர் திரு. **Sitiveni Rabuka** ஆகியோரை இன்று சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.

தலைநகர் **Suba-**வில் இந்தியாவின் சார்பில் கட்டப்படவுள்ள 100 படுக்கைகள் கொண்ட சிறப்பு பன்னோக்கு மருத்துவமனைக்கான திட்ட ஆவணங்களை அவர் வழங்கவுள்ளார்.

பின்னர் இந்திய வம்சாவளியினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

தனது **Fiji** பயணத்தை முடித்துக் கொண்டு, திருமதி. திரௌபதி முர்மு நாளை நியூஸிலாந்து செல்கிறார்.

>>>><<<

பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்களாதேஷில் நிலவிவரும் சூழ்நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே, பங்களாதேஷில் தற்காலிக அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டின் ராணுவத் தலைவர் ஜென்ரல் **Waqar Uz Zaman** கூறியுள்ளார்

இந்நிலையில் பங்களாதேஷில் நிலவும் சூழல் குறித்து அந்நாட்டு அதிபர் திரு. மொஹமத் சஹாபுதீன், அந்நாட்டு முப்படையினர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன், அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

முன்னாள் பிரதமரும், பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவருமான திருமதி. கலிதா ஜியா-வை வீட்டுச் சிறையிலிருந்து விடுவிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் விடுவிக்குமாறும் திரு. ஷஹாபுதீன் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, போராட்டம் காரணமாக திருமதி. ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை ராஜினாமா செய்த பின், அந்நாட்டைவிட்டு வெளியேறினார்.

இந்நிலையில், இந்திய – பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், அங்கு இயல்பு நிலை நிலவி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இந்தியா – பங்களாதேஷ் இடையே இருமார்க்கங்களிலும் விமான சேவையை ஏர்-இண்டியா ரத்து செய்துள்ளது.

>>>><<<

நாட்டின் முதலாவது பன்னாட்டு விமானப்படை பயிற்சி கோவை மாவட்டம், சூலூரில் இன்று தொடங்குகிறது.

**TARANG SHAKTI** என்ற பெயரில் நடைபெறும் இப்பயிற்சியில், 30 நாடுகள் பங்கேற்கின்றன. அவற்றில் 10 நாடுகள் தங்களுடைய போர் விமானங்களுடன் ஈடுபடுகின்றன.

இதுகுறித்து புதுதில்லியில் செயதியாளர்களிடம் பேசிய விமானப்படையின் துணைத்தளபதி ஏர்மார்ஷல் ஏ.பி. சிங், இரண்டு கட்டங்களாக இப்பயிற்சி நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

முதல்கட்டமாக சூலூரில் இன்று தொடங்கி, 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாவும், இரண்டாம் கட்டமாக ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இம்மாதம் 29ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 14ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஸ்பெயின், ஐக்கிய அரபு எமிரேட், இங்கிலாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமானப்படை இந்த பயிற்சியில் பங்கேற்கவுள்ளதாகவும், 18 நாடுகள் பார்வையாளர்களாக கலந்து கொள்ளவுள்ளதாகவும் ஏர்மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்தார்.

>>>><<<

கர்நாடகாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுடன், 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா உறுதி அளித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெலகாவி-யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய வீடுகள் மூலம் எதிர்காலத்தில் வெள்ள பாதிப்பிலிருந்து மக்கள் மீள முடியும் என்று கூறினார்.

பழுதடைந்த சாலைகள், பாலங்கள், மின்கம்பங்களை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. சித்தராமையா தெரிவித்தார்.

**>>>><<<**

உத்ராகண்ட் மாநிலத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட **Kedarghati** பகுதியில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களை ஹெலிகாப்டர் மூலம் மீட்புப் படையினர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

ட்ரோன்கள் மூலமும், மோப்ப நாய்கள் உதவியுடனும் காணாமல் போனவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

மீட்புப் பணிகள் இன்று மாலைக்குள் நிறைவடைந்துவிடும் என்று தேசிய பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**>>>><<<**

ஹிமாச்சலப்பிரதேசத்தில் குல்லு, மண்டி, சிம்லா ஆகிய இடங்களில் மழை வெள்ளத்தால் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து ஐந்தாம் நாளாக நேற்று நடைபெற்றது.

சுமார் 40 பேரை காணவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேடுதல் பணியின் போது, 15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

**>>>><<<**

சிக்கிம் மாநில சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது.

நடப்பு நிதியாண்டிற்கான 14 ஆயிரத்து 490 கோடி ரூபாய் மதிப்பிலான பட்ஜெட்டை அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமாங் தாக்கல் செய்தார்.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, சுகாதாரம், வேளாண்மை, சுற்றுலா, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நலன், உள்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு இந்த பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

>>>><<<

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்திலிருந்து கடலுக்குச் சென்ற 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து, இரண்டு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 21ஆம் தேதி ஒரு படகில் 12 மீனவர்களும், 23ஆம் தேதி மற்றொரு படகில் 10 மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் அந்த மீனவர்களை எல்லை தாண்டியதாக கூறி, கைது செய்து மன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<

தமிழகத்தில் நிலச்சரிவு போன்ற பேரிடர் சம்பவம் நடைபெறாமல் இருப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி தெரிவித்துள்ளார்.

கோவையில், யானை தாக்கியதில் காயமடைந்து, அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவரை சந்தித்து நிவாரணத் தொகை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலச்சரிவு நிகழ்ந்த வயநாடு பகுதியில் இயல்புநிலை திரும்பிய பிறகு, தமிழகத்திலிருந்து தொழில்நுட்பத்துறை அதிகாரிகள் அங்கு செல்லவுள்ளதாக கூறினார்.

அப்போது, இந்த நிலச்சரிவு எதனால் ஏற்பட்டது என்பது குறித்து அவர்கள் ஆராயவுள்ளதாகவும் திரு. முத்துசாமி குறிப்பிட்டார்.

>>>><<<

நெசவாளர்களின் வாழ்வியல் முறை குறித்து இளைஞர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில், மத்திய அரசின் சார்பில் நெசவாளர்கள் சேவை மையத்தின் மூலம், விழிப்புணர்வு நிகழ்ச்சி தமிழகத்தில் உள்ள சேலத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் மூலம் நெசவுத் தொழிலில் ஈடுபடும் முறை, நெசவுத் தொழிலாளர்களின் பணி ஆகியவற்றை தாங்கள் அறிந்து கொண்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 38 செகண்ட்ஸ்)

>>>><<<

நாட்டின் வடமேற்கு மற்றும் கிழக்குப் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம் மற்றும் திரிபுரா மாநிலங்களில் வரும் 10ஆம் தேதிவரை கன முதல் மிககனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

ஜார்கண்ட், பீகார், ஒடிசா, மேற்குவங்க மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, சண்டிகர் மாநிலங்கள் மற்றும் தில்லியில் ஒரு வார காலத்திற்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>><<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இன்று ஹாக்கி, தடகளம், டேபிள் டென்னிஸ், மல்யுத்தம் உள்ளிட்ட பிரிவுகளில் பங்கேற்கிறது.

ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 10.30-க்கு தொடங்குகிறது.

ஈட்டி எறிதல் பிரிவில் நீரஜ் சோப்ரா, கிஷோர் குமார் ஜெனா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கிரண் பஹல் பங்கேற்கிறார்.

மகளிர் குத்துச்சண்டை 50 கிலோ எடைப்பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் வினேஷ் போஹத், ஜப்பானின் **Susaki Yui-**யை எதிர்கொள்கிறார்.

ஆடவர் டேபிள் டென்னிஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியா-சீனாவை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற மகளிர் மல்யுத்த பிரிவின் காலிறுதிப் போட்டியில் நிஷா தாஹியா, வடகொரிய வீராங்கனையிடம் தோல்வியடைந்தார்.

ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் **Steeplechase** பிரிவில் இந்திய வீரர் **Avinash Sable** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>END<<<**